**Eastern University, Sri Lanka,**

**Faculty of Arts and Culture**

**First Year/ Second Semester Examination in Bachelor of Arts &Culture**

**( 2016/17 Batch)/(July-August 2019)**

**EC 1212 Fundamentals of Macroeconomics**

முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

நேரம்: 02 மணித்தியாலங்கள்

---

பகுதி 1

1) அ. பேரினப் பொருளாதாரம் ஒன்றின் குறிக்கோள்களை அடையாளப்படுத்துக.

(07 புள்ளிகள்)

ஆ. சேயின் சந்தை விதியினை (Say's Market Law) விளக்குக.

(08 புள்ளிகள்)

இ. வணிக வங்கிகளின் கடனாக்க/பணவாக்க தொழிற்பாட்டை உதாரணங்களைக் கொண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

2) அ. மூன்று துறை மாதிரியொன்றின் வருமான வட்டப் பாச்சலை எளிய சுற்றோட்டப் படம் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)

ஆ. நிறுவன அலகுகள் என்பதால் நீர் விளங்குவது யாது? பொருளாதார மொன்றில் செயற்படும் 5 வகையான நிறுவன அலகுகளைக் குறிப்பிடுக.

(5 புள்ளிகள்)

இ. பொருளாதார மொன்றின் 2018 ஆம் ஆண்டிற்கான தரவுகள்

மில்லியன் ரூபாயில்

வீட்டுத்துறை நுகர்வு- 50

அரசின் நுகர்வு- 40

மொத்த நிலையான மூலதனவாக்கம்- 80

மூலதன நுகர்வு- 10

இருப்பு மாற்றம்- 15

பெறுமதி மாற்றம்- 50

ஏற்றுமதி- 20

இறக்குமதி- 10

வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானம்- 20

வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம்- 10

வெளிநாட்டு நடைமுறை மாற்றல் பெறுகை- 50

வெளிநாட்டு நடைமுறை மாற்றல் செலுத்துகை- 40

கணிக்கவேண்டியவை,

1. மொத்த உள்நாட்டு செலவு (GDE)
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
3. மொத்த தேசிய உற்பத்தி (GNP)
4. செலவிடக்கூடிய மொத்த தேசிய உற்பத்தி
5. மொத்த உள்நாட்டு சேமிப்பு, மொத்த தேசிய சேமிப்பு

(5*3=15புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

3) அ. கெயின்சினது நுகர்வுச் சார்பை வரைபடம் மூலம் சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

ஆ. முதலீட்டுப் பெருக்கி என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(5 புள்ளிகள்)

இ. மூன்று துறைப் பொருளாதார மொன்றின் விபரங்கள் (மில்லியன் ரூபாயில்) தரப்படுகின்றன.

C = 48+0.8yd (நுகர்வுச் சார்பு)

I = 62 (முதலீட்டுச் செலவு)

G = 40 (அரசசெலவு)

T = 10 (தன்னிச்சையானவரிகள்)

1. தேசியவருமானச் சமநிலையை கணிக்கும் மூன்று முறைகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஏதேனும் ஒருமுறையில் சமநிலை வருமானத்தைக் கணிப்பிடுக.

2. செலவீட்டுப் பெருக்கி, வரிப் பெருக்கி என்பவற்றைக் காண்க.

3. இப்பொருளாதாரத்தின் தன்னிச்சையான செலவீடுகளின் பெறுமதி யாது?

4. சுயேட்சை வரிக்கு மேலதிகமாக அரசு 10வீத வருமான வரியினை அறிமுகம் செய்துடன், 3 மில்லியன் மாற்றல் கொடுப்பனவையும் செய்யுமாயின் தேசியவருமானச் சமநிலையைக் காண்க.

5. தற்போது அரசாங்கம் பொருளாதாரத்தினை திறந்து விட்டதனால் ஏற்றுமதிகள் 36 மில்லியனாகவும், இறக்குமதி 24 மில்லியன் ஆகவும் இருப்பின் சமநிலை தேசிய வருமானம் யாது?

(5*3=15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## பகுதி 11

4) அ. மத்தியவங்கியின் பணிகளைக் குறிப்பிட்டு அவற்றின் நாணயக் கொள்கையின் கருவிகளின் தொழிற்பாட்டை ஆராய்க.

(12 புள்ளிகள்)

ஆ. கேள்வித் தூண்டல் மற்றும் செலவுத்தூண்டல் பணவீக்கத்தை வரைபடம் மூலம் விளக்குக.

(13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

5) அ. வேலையின்மையின் வகைகளை விளக்குக.

(7 புள்ளிகள்)

ஆ. பணவீக்கம் ஏற்படுத்தும் பொருளாதார தாக்கங்களை விளக்குக

(8 புள்ளிகள்)

இ. வேலையின்மைக்கும் பணவீக்கத்திற்கும் உள்ள தொடர்பை பிலிப்ஸ் வளையியை (Phillips Curve) பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

6) அ. வர்த்தக சகட ஓட்டம் (Business Cycle) என்பதனை விளக்கி அதன் கூறுகள் மற்றும் பண்புகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. சென்மதி நிலுவை ஒன்றின் உள்ளடங்கல்களைக் குறிப்பிட்டு அதன் சமநிலையின்மையின் போது அதனை சீர்செய்யவேண்டிய வழிமுறைகளை ஆராய்க.

(13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)